**எஸ்.டி.சி .எண்.2793/2023** **நாள்– 10.04.2026**

**ம.சா .2 சிவக்குமார் மணி த/பெ. மணி**

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் எம் எஸ் சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். இந்த வழக்கு எதிரியை எனக்கு முன்னதாகவே தெரியுமா என்றால் சுமார் 25 வருடங்களாக தெரியும். எதிரியும் நானும் ஒன்றாக கல்லூரி படித்த வகையில் தெரியும். எதிரி அவரது மனைவி பெயரில் நிறுவனங்கள் நடத்தி வந்தது தெரியுமா என்றால் தெரியும் அந்த நிறுவனங்களின் பெயர் தெரியுமா என்றால் ஸ்ரீ திருமால் எக்ஸ்போர்ட் ஸ்ரீ திருமால் பேப் க் ஸ்ரீ திருமால் அன்ட் கோ. வழக்கின் புகார்தாரையும் எனக்கு தெரியும். வழக்கின் எதிரிக்கும் புகா'ர்தாரருக்கும் எனது மூலம் தான் அறிமுகம் என்றால் சரிதான். வழக்கின் கடன் தொகை எனது மூலமாகத்தான் எதிரிக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதற்காக கடன் கொடுக்கப்பட்டது என்றால் தொழிலுக்காக கொடுக்கப்பட்டது. வழக்குப் புரோ நோட்டு எப்பொழுது எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் கடந்த 5.4.2019 ஆம் தேதி அன்று புகா'ர்தாரரின் நிறுவனத்தில் வைத்து எழுதப்பட்டது.சுகாதார என்ன நிறுவனம் வைத்து நடத்தி வருகிறார் என்றால் பைனான்ஸ் தொழில் செய்கிறார் அதன் பெயர் எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்தில் எத்தனை நபர்கள் வேலை செய்கிறார்கள் என்று தெரியாது. அந்த நிறுவனத்திற்கு சொந்தமான தொகையை தான் எதிரிக்கு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த நிதி நிறுவனத்திற்காக தான் புரோநோட்டும் எழுதிக் கொடுக்கப்பட்டது.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

அந்த புரோநோட்டு எழுதிக் கொடுக்கும் பொழுது யார் உடன் இருந்தார்கள் என்றால் நான், புகார்தார்ர மற்றும் எதிரி இருந்தோம். புகார்தாரரின் நிறுவனத்தில் வேலை ஆட்கள் உள்ளனரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 3 புரோநோட்டு விபரங்கள் கருப்பு மையினாலும் கையெழுத்து புளூ மையினாலும் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் குடும்ப செலவு என்ற இடத்தில் குடும்பம் என்பது மட்டும் அடிக்கப்பட்டு வியாபாரம் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அடித்து எழுதப்பட்ட பின்பு எதிரியிடம் குறுக்கப்பம் எதுவும் பெறப்பட்டதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ 3 மற்றும் ம.சா.ஆ 5 ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்கள் ஒரே மையினால் உள்ளதா என்றால் இல்லை நான் சொல்வது தவறு என்றாலும் இவ்வழக்கிற்காக பொய்யாக அவ்வாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2. எனக்கும் எதிர்க்கும் இடையே கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிரச்சனையால் நாமக்கல் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் என்னால் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் நாமக்கல் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களால் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விசாரணையின் அடிப்படையில் எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்தினை எனக்கு எழுதிக் கொடுக்க வேண்டும் என முடிவு காணப்பட்டது என்றால் சரிதான். அதன்படி எதிரியும் எனக்கு அவரது சொத்தினை எழுதிக் கொடுத்தார். அந்தப் புகாரின் நான் எதிரிக்கு கொடுத்த கடன் தொகை பிறநபர்களிடமும் இருந்து பெறப்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

நான் எதிரியின் மனைவியின் மீதும் இரண்டு காசோலை மோசடி வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

இவ்வழக்கினை தவிர வேறு வழக்குகள் எதுவும் எதிரியின் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் சென்னையில் தாக்கல் செய்துள்ளேன். அதுவும் நிலுவையில் இருந்து வருகிறது.

3. நான் சொல்வது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இவ்வழக்கு புரோநோட் எழுதப்படவில்லை என்றாலும் எதிரி மீது எனக்குள்ள முன் விர விரோதம் காரணமாக எதிரி ஆர்டிஜிஎஸ் மூலம் வாங்கிய தொகையை 10.11.2020–ம் தே தி கொடுத்து நேர் செய்த பின்னிட்டும் மேற்படி கடன் தொகை பெற்ற பொழுது பொறுப்பிற்காக எதிரியால் கொடுக்கப்பட்ட கையெழுத்து மட்டும் செய்து நிரப்பப்படாமல் கொடுத்த புரோநோட் மற்றும் காசோலைகளை தவறாக பயன்படுத்தி இவ்வழக்கு பொய்யாக எதிரியின் மீது எனது தூண்டுதலின் பேரில் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி புகா'ர்தாரர் சட்டப்படியாக எதிரிக்கு கடன் தொகை கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் வழக்கு புரோநோட் பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதால் தான் அடித்தல் திருத்தல் உள்ளது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்
**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**